# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## காசிமி மன்றம் (கூட்டிணைத்தல்)

**காசிமி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அலிஸாஹிர் மௌலானா செயிட் அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

---

[ *47 ஆம் சட்டமூலம்* ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 009564 - 225 (2015/12)

## காசிமி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"காசிமி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப் பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்பு பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ள தாதலாலும் : *முன்னுரை.*

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, காசிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2**. இச்சட்டம், தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) காசிமி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர் களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர் களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "காசிமி மன்றம்" என்ற பெயரின் கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், *காசிமி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) போதைப்பொருள், இயற்கை அனர்த்தங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான கல்வியினை வழங்கல் ;

(ஆ) க.பொ.த.(சா.த), க.பொ.த.(உ.த) மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் கல்வி சம்பந்தமாக விசேட நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் ;

(இ) மார்க்கக் கல்வி, முன்பள்ளி பாடசாலை ஆகியவற்றின் போதனாசிரியர்களின் பயிற்சிக்கான கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் ;

(ஈ) மீன்பிடித்துறை மற்றும் விவசாயத்துறைகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கி அதனை அமுல் படுத்தல் ;

(உ) உள்நாட்டு மரபுரீதியான விளையாட்டுகளுக்கு இளைஞர்களை ஊக்குவிப்பதோடு தொழில்சார் அபிவிருத்திகளை நல்குதல் ;

(ஊ) மகளிர்களுக்காக அனைத்துத்துறையிலும் வாய்ப்பினையும் முன்னுரிமைகளையும் பெற்றுக்கொடுத்தல் ;

(எ) மகளிர்களுக்காக சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி பயிற்சிகள் மற்றும் வசதிகளை வழங்குதல் ;

(ஏ) மகளிர் தம் சம உரிமைகளை பெற்றுக்கொள்ள சட்ட உதவிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ;

(ஐ) மூத்த பிரசைகளுக்கும் இராணுவ வீரர்களுக்கும் உரிய அந்தஸ்தை ஏற்படுத்திக்கொடுத்தல் மற்றும் முன்னுரிமைகளை வழங்குதல் ;

(ஒ) சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல் ; அத்துடன்

(ஓ) மேலே அனைத்து குறிக்கோள்களையும் அடைந்து கொள்ளத் தேவையான வசதிகளை மேற்கொள்ளல்.

சொத்துக்களைச் சுவீகரித்தல், நிதிகளை முதலீடு செய்தல், கடன் பெறுதல் முதலிய கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ் -

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படும் காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனை செய்வதற்கும், சுவீகரிப்பதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும், நிறுவுவதற்கும் அல்லது வேறுவகையில் பெறவும் ;

(ஆ) பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக அரசினது அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள், நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து கடன்களையும் (உள்நாட்டு, வெளிநாட்டு) உதவிகள், கொடைகள் என்பவற்றைப் பெறவும் ;

(இ) செலாவணி பில்பத்திரங்கள், காசோலைகள், உறுதிப்பத்திரங்கள் அத்துடன் ஏனைய கொடுக்கல் வாங்கல்களைச் செய்யக்கூடிய சாசனங்களைத் தயாரிக்கவும், எழுதவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், கொடுக்கல் வாங்கல் செய்யவும், கொள்வனவு செய்யவும் விற்பனை செய்யவும், விநியோகிக்கவும், வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும், முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை பணிப்பாளர்சபை பொருத்தமெனக் கருதும் வகையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) உதவு தொகைகள், சந்தா கட்டணங்கள், கொடைகள் நன்கொடைகள் மற்றும் எல்லா வகையிலுமான பரிசுகளைக் கோரவும் கையேற்கவும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும் ;

(எ) ஏதேனும் நிலையான ஆதனத்திற்கு அல்லது தனிப் பட்ட ஆதனத்திற்கு ஏற்புடைய நிபந்தனைகளைப் பொறுப்பேற்கவும், ஏற்றுக்கொள்ளவும், நடைமுறைப் படுத்தவும், நிறைவேற்றவும், நிர்வகிக்கவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களையும், சேவை யாளர்களையும் நியமனஞ்செய்யவும், வேலையில் ஈடுபடுத்தவும், பதவிநீக்கஞ் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனம் தீர்மானிக்கும் சம்பளங்கள், படிகள், பணிக்கொடைகள் என்பவற்றை கொடுப்பனவு செய்யவும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஊழியரைப் பயிற்றுவிக்க வும் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுறுதியாகவும் நடைமுறைப்படுத்த அவசியமான அல்லது சந்தர்ப்பசூழ்நிலைக்கேற்றவாறு ஏனைய சகலவற்றையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**5**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங் கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக் குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி விலகல் ;

(ஆ) பணிப்பாளர் சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவி நீங்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது பதவியை வறிதாக்கல் அத்துடன் முகாமைச் சபையின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை என்பன ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், நடத்தைகளும் ;

(ஈ) கட்டுப்பாட்டுச் சபை, கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் உபகுழுக்களின் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களில் செயற்றிட்டங்களை நிரப்புதல், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கட்டுப்பாட்டுச் சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினர்களின் தகைமைகளும் தகைமையீனங்களும்; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்து முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முந்திய நாளில் இருந்த நிறுவனத்தின் விதிகள், இச்சட்டத்தினதும் வேறேதேனுமொரு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராதவரை அவை கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டவொரு விதியாக அது

போன்ற கூட்டத்தில் அதுபோன்ற வகையில் திருத்தவும், மாற்ற வும் அல்லது அதற்கு ஏதேனுமொன்றைச் சேர்க்கவும் அல்லது நீக்கஞ் செய்யவும் முடியும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தின் நிதிகள்.*

**6.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் நிதியாண்டு சனவரி 1 ஆம் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆம் திகதிவரை ஆதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்துக்காக கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லா பணங்களும் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானிக்கும் வங்கி ஒன்றில் கூட்டுத்தாப னத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப் படவுள்ள னவும் மன்றத் திற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.*

**7.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**8.** (1) கூட்டுத்தாபனமானது, வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றித் தகுந்தவாறான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகத் தகைமைபெற்ற ஒரு கணக்காய் வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதல் அல்லது ஒடுக்கப்படுதலின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.

**9**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தலை அதன் விதிகளின் மூலம் தடை செய்கின்றதுமான நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்கு பேரவையின் இணக்கத்துடன் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.**

***10***. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, செயலாளர், தலைவர் அல்லது பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

**குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.**

***11***. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் பங்கப்படுத்தவோ அல்லது பாதிக்கவோ ஆகாது.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

***12***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*